# தமிழ்நாடு அரசு

## வணிகவரித்துறை,

## சென்னை வடக்கு கோட்டம்

## பொது ஏல அறிவிப்பு

திருவாளர்கள். தனலஷ்மி அண்ட் கோ., க.எண். 5, சோமசுந்தரம் தெரு, சௌக்கார்பேட்டை, சென்னை- 01, உரிமையாளர் (லேட்) திரு. ஜி. வரதராஜுலு செட்டி அவர்களிடமிருந்து விற்பனை வரி நிலுவைக்காக (உதவி ஆணையர் (மாவ), என்.எஸ்.சி போஸ் ரோடு வரிவிதிப்பு வட்டம் ஆவணங்களின்படி) ஜப்தி செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் அசையா சொத்து, துணை ஆணையர் (மாவ), சரகம் - 2, சென்னை - 3 அவர்களால் 23.02.2023 அன்று காலை 11 மணிக்கு கீழ்க்குறிப்பிட்ட இடத்தில் பகிரங்க ஏலம் விடப்படும்.

| | |
|---|---|
| **சொத்து விவரம்:** | க.எண்.5, சோமசுந்தரம் தெரு, சௌகார்பேட்டை, சென்னை 600 001- மூன்று மாடி வீடு மற்றும் அதன் அடிமனை (1824 சதுர அடி.)<br>நிலத்துடன் ஒரு பக்கா மூன்று அடுக்கு கட்டிடம் சௌகார்பேட்டை, சென்னை-79, எண். 5 சோமசுந்தர முதலி தெருவில் அமைந்துள்ளது. ஓ.எஸ்.எண். 4637, ஆர்.எஸ்.எண்.6657/1 தொகுதி எண்.57, சிசி எண். 2558 என்ற அளவில் 1824 சதுர அடியில் அமைந்துள்ளது.<br>வடக்கு எல்லை சோமசுந்தர முதலி தெரு,<br>தெற்கு எல்லை வளாகம் எண். 4 சோமசுந்தர முதலி தெரு,<br>கிழக்கு எல்லை வளாகம் எண். 4 சோமசுந்தர முதலி தெரு,<br>மேற்கு எல்லை புல்சேரி அப்பாசாமி பிள்ளை வீடு (ஆர்.எஸ்.எண். 6656),<br>குறைந்தபட்ச ஏலத்தொகை ரூ.1,15,00,000/-<br>டேவணித் தொகை(Earnest Money Deposit) ரூ. 17,25,000/- |
| **ஏலம் விடப்படும் இடம் :** | தரைதளம்,<br>ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டிடம்,<br>சென்னை (வடக்கு) கோட்டம்,<br>எண்.32, யானை கவுனி பாலச்சாலை, சென்னை - 3.<br>(யானை கவுனி காவல் நிலையம் அருகில் |
| **ஏல தேதி:** | **23.02.2023 காலை 11.00 மணிக்கு** |
| **ஏல சம்பந்தமாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :** | துணை ஆணையர் (மா.வ.),சரகம் - 2 அலுவலகம்,<br>அறை எண். 510, 512 தளம் -5,ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டிடம், சென்னை (வடக்கு) கோட்டம்,<br>எண.32, யானை கவுனி பாலச்சாலை, சென்னை - 3.<br>(யானை கவுனி காவல் நிலையம் அருகில்).<br>தொலைபேசி எண்: 044-25350084, 044-25354401, 9445195029<br>**மின்னஞ்சல் முகவரி:** dcct.zone2@ctd.tn.gov.in |

**குறிப்பு** - ஏலத்தில் பங்கேற்க விரும்புவோர் மேற்கண்ட சொத்திற்கு உண்டான டேவணித் தொகையை (Earnest Money Deposit) வங்கி வரைவோலையாக (Demand Draft Favouring **"The Assistant Commissioner(ST), N.S.C.Bose Road Assessment Circle"**) சமர்ப்பித்து ஏலம் விடப்படும் நாளான 23.02.2023 அன்று காலை 11.00 மணிக்கு நேரில் ஆஜராகி ஏலத்தில் பங்கேற்கலாம். **வீடு விற்பனை துணை ஆணையர் (மாநில வரிகள்) சரகம் -2, சென்னை -3 அவர்களால் உறுதி செய்யப்பட்டாலே இறுதியானது மற்றும் இதர நிபந்தனைகளுக்கு உட்பட்டது.**

ஒம்/- பா. சரண்யா,<br>துணை ஆணையர் (மா.வ.),<br>சரகம் - 2, சென்னை-03.<br>நியமிக்கப்பட்ட அதிகாரி.

இடம். சென்னை<br>நாள. 06.02.2023

ந.க.எண் 1813/1991/அ3

உதவி ஆணையா(மாவ), அலுவலகம்,
மண்ணடி வரிவிதிப்பு வட்டம்
நாள் 06.02.2023.

படிவம் -7

(பிரிவு 36)

வீடு ஏல விற்பனை அறிவிக்கை

இதனால் அனைவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், இதனடியில் குறிப்பிடப்பட்டுள்ள வீடு மற்றும் மனை இடம் (லேட்) திரு.ஜி. வரதராஜூலு செட்டி அவர்களிடமிருந்து விற்பனை வரி நிலுவைக்காக (உதவி ஆணையர் (மாவ), என்.எஸ்.சி போஸ் ரோடு வரிவிதிப்பு வட்டம் ஆவணங்களின்படி) ஜப்தி செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் அசையா சொத்து, துணை ஆணையர் (மாவ), சரகம் - 2, சென்னை - 3 அவர்களால் 23.02.2023 அன்று காலை 11 மணிக்கு கீழ்க்குறிப்பிட்ட இடத்தில் பகிரங்க ஏலம் விடப்படும்.

இடம் ஒருங்கிணைந்த வணிகவரி கட்டிட அலுவலகம், தரைத்தளம்
எண் 32,வால்டாக்ஸ் சாலை, சென்னை -03.

நாள் 23.02.2023, முற்பகல். 11.00 மணிக்கு

அதுசமயம்,

1. ஏலம் கோருபவர் 15 சதவீதம் காப்புத்தொகை வரைவோலை (Demand Draft) மூலம் செலுத்த வேண்டும், அவ்வாறு செலுத்துபவர் ஏலம் கோரிய 30 நாட்களுக்குள் மீதித் தொகையையும் செலுத்த வேண்டும். செலுத்தத் தவறினால் காப்புத் தொகையை இழந்தவராவார்.

2. காப்புத்தொகையை செலுத்தவில்லையாயினும் அன்றி மீதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தாத பட்சத்தில் மேற்படி சொத்து மறு ஏலம், முன்னவரது செலவிலும் பொறுப்பிலும் போடப்படும்.

3.ஏலம் கோருபவர்கள் ஏலம் எடுப்பது தனக்காகவா அன்றி வேறு நபர்களுக்காகவா என்பதை முன்னதாகவே தெரிவிக்க வேண்டும். வேறு நபர்களுக்காக ஏலம் கோருபவர்கள் உரிய அத்தாட்சிக் கடிதம் கொடுத்த பின் ஏலம் கோர வேண்டும்.ஏலத்தில் கலந்துக்கொள்ளும் நபர் இந்திய அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட ஏதேனும் ஒரு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை கொண்டு வர வேண்டும்.

4.பாக்கித்தாரராவது அல்லது அவரைச் சார்ந்தவராவது அல்லது மேற்படி சொத்தில் உரிமை கொண்டாடுபவர்களாவது ஏல நாளுக்கு முந்தைய நாள் சூரிய அஸ்தமனத்திற்குள் பாக்கியை வட்டி முதலிய செலவுகளுடன் செலுத்தினாலொழிய ஏலம் நிறுத்தப்படமாட்டாது.

5.வீடு மற்றும் நிலம் விற்பனை துணை ஆணையர் (வணிகவரிகள்) சரகம் - 2,சென்னை - 3 அவர்களால் உறுதி செய்யப்பட்டாலே இறுதியானது. ஊர்ஜிதம் செய்வதற்கான கால அவகாசம் 30 நாட்கள் அளிக்கப்படும். மேற்படி ஏல விற்பனையில் அதிருப்தி கொண்டால் மேல்முறையீடு செய்யவே அக்கால அளவு கொடுக்கப்படுகிறது. ஏல விற்பனை ஊர்ஜிதம் செய்தவுடன் சொத்து ஏலம் எடுத்தவர் பெயருக்கு பதிவு செய்ய துணை ஆணையர் (வணிகவரிகள்) அவர்களின் முத்திரையுடன் சான்று வழங்கப்படும்.

6.ஏலம் விடப்படும நிலத்தின் /வீட்டின் பரப்பிலோ அல்லது விவரத்திலோ தவறு ஏற்படின் அதற்கு அரசு பொறுப்பல்ல.

7. ஏலம் விடப்படும் நிலம் /வீடு ஏற்கனவே வில்லங்கத்தில் இருப்பின் ஏலம் எடுப்பவர் தமது சொந்தப்பொறுப்பில் அதை தீர்த்துக்கொள்ள வேண்டியது.

சொத்து விபரம்

| வட்டம் / கிராமம்/ நிலுவைதாரரின் பெயர் | சொத்தின் விபரம் மற்றும் தோராய அளவு |
|---|---|
| (லேட்) திரு. ஜி. வரதராஜூலு செட்டி | க.எண்.5, சோமசுந்தரம் தெரு, சௌகார்பேட்டை, சென்னை 600 001- மூன்று மாடி வீடு மற்றும் அதன் அடிமனை (1824 சதுர அடி.) மூன்று அடுக்கு கட்டிடம் சௌகார்பேட்டை, சென்னை-79, பழைய எண்.2/4, புதிய எண். 5 சோமசுந்தர முதலி தெருவில் அமைந்துள்ளது. ஓ.எஸ்.எண். 4637, ஆர்.எஸ்.எண்.6657/1 தொகுதி எண்.57, சிசி எண். 2558 என்ற அளவில் 1824 சதுர அடியில் அமைந்துள்ளது.<br>வடக்கு எல்லை சோமசுந்தர முதலி தெரு,<br>தெற்கு எல்லை வளாகம் எண். 4 சோமசுந்தர முதலி தெரு, கிழக்கு எல்லை வளாகம் எண். 4 சோமசுந்தர முதலி தெரு, |

| | |
|---|---|
| | மேற்கு எல்லை புல்சேரி அப்பாசாமி பிள்ளை வீடு (ஆர்.எஸ்.எண். 6656),<br>**குறைந்தபட்ச ஏலத்தொகை ரூ.**1,15,00,000/-<br>**டேவணித் தொகை(Earnest Money Deposit)**<br>**ரூ.** 17,25,000/- |

இடம். ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டிடம், தரைத்தளம்,
எண 32, வால்டாக்ஸ் சாலை, சென்னை-3.

நாள் 23.02.2023

**ஏல சம்பந்தமாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

துணை ஆணையர் (மா.வ.),
சரகம் - 2 அலுவலகம்,
அறை எண். 510, 512 தளம் -5,
ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டிடம்,
சென்னை (வடக்கு) கோட்டம்,
நில எண் 32, யானை கவுனி பாலச் சாலை, சென்னை - 3.
(யானை கவுனி காவல் நிலையம் அருகில்).
தொலைபேசி எண்: 044-25350084, 044-25354401,
9445195029,
**மின்னஞ்சல் முகவரி:** dcct.zone2@ctd.tn.gov.in

ஒம்/-க.பத்மா,
உதவி ஆணையர்(மாவ),
மண்ணடி வரிவிதிபு வட்டம்,
சென்னை 03.

பெறுநர்
**தகவல் பலகை**
நகல்
1.(லேட்)திரு.ஜி. வரதராஜூலு செட்டி, க.எண்.5, சோமசுந்தரம் தெரு,சென்னை-79.
2. இணை ஆணையர் (மாவ), சென்னை (வடக்கு) கோட்டம் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.
3.துணை ஆணையர்(மாவ), சரகம் -2 அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.
4.மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னை அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.
5. கோட்டாட்சியர், சென்னை அவர்களுக்கு பரந்த விளம்பரம் செய்யும் பொருடடு பணிந்தனுப்பப்படுகிறது .
6.வட்டாட்சியர், சென்னை அவர்களுக்கு பரந்த விளம்பரம் செய்யும் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.
7.சார்பதிவாளர், சென்னை அவர்களுக்கு பரந்த விளம்பரம் செய்யும் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது
8.ஆணையாளர், சென்னை மாநகராட்சி, அவர்களுக்க பரந்த விளம்பரம் செய்யும் பொருட்டு
9.ஆணையாளர், சென்னை (வடக்கு) மற்றும் (தெற்கு), மாநகராட்சி ஒன்றிம், அவர்களுக்கு பரந்த விளம்பரம் செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது.
10. ஆய்வாளர், சி2 யானைக்கவுனி காவல்நிலையம் காவல் நிலையம், சென்னை-03 அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
11. க.எண்.5, சோமசுந்தரம் தெரு,சென்னை-79 வீட்டில் ஒட்டி சார்பு செய்ய.